இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 289 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – வைகாசி 16 – வெள்ளிக்கிழமை 30 மே 2025 – வெளியூர் 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 289 : Thiruvalluvar Year - 2056 - Vaikasi 16 - Friday 30 May 2025 - Dak 16 Pages ₹ 5.00


## நகராட்சி நிர்வாகம் – குடிநீர் வழங்கல் துறை சார்பில் 16 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி,

# ரூ.571.92 கோடியில் 49 முடிவுற்ற பணிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்து 50 வாகன சேவைகளையும் தொடங்கி வைத்தார்!

**சென்னை, மே 30 -**

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் மொத்தம் ரூ.571.92 கோடி மதிப்பிலான 49 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, 16 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக் கல் நாட்டி, பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 50 வாகனங்களின் சேவைகளை தொடங்கி வைத்தார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.5.2025) தலைமைச் செயல கத்தில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ் செயல்படும் பெரு நகர சென்னை மாநகராட்சி சார்பில் 30 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் 11 முடிவுற்ற பணிகள், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் 188 கோடியே 55 இலட்சம் ரூபாய் செலவில் 3 முடிவுற்ற பணி கள், நகராட்சி நிருவாக இயக்குநரகத்தின் சார்பில் 102 கோடியே 59 இலட்சம் ரூபாய் செலவில் 19 முடிவுற்ற பணிகள், பேரூராட்சி கள் ஆணை யரகத்தின் சார்பில் 77 கோடியே 7 இலட்சம் ரூபாய் செலவில் 14 முடிவுற்ற பணிகள், தமிழ்நாடு குடிநீர் வடி கால் வாரியம் சார்பில் 60 கோடியே 58 இலட்சம் ரூபாய் செலவில் 2 முடிவுற்ற கூட் டுக் குடிநீர் திட்டங்கள் ஆகியவற்றை திறந்து வைத்து, பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 59 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 9 புதிய திட்டப்பணிகள், நக ராட்சி நிருவாகத் துறை சார்பில் 15 கோடியே 11 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 2 புதிய திட்டப் பணிகள், பேரூராட்சிகள் ஆணையரகத் தின் சார்பில் 18 கோடியே 38 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 5 புதிய திட்டப் பணி களுக்கு அடிக்கல் நாட்டினார். மேலும், பெரு நகர சென்னை மாநகராட்சி சார்பில் 19 கோடியே 44 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 50 புதிய வாகனங்களின் சேவைகளை தொடங்கி வைத்தார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.5.2025) தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில், புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற பணிகளை திறந்துவைத்து, பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 19.44 கோடி ரூபாய் மதிப்பிலான 50 புதிய வாகனங்களின் சேவைகளை தொடங்கி வைக்கும் விதமாக 2 ஓட்டுநர்களிடம் வாகனங்களுக்கான சாவிகளை வழங்கினார். இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் திறந்து வைக்கப்பட்ட பணிகளின் விவரங்கள்

பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் மணலி மண்டலம், மாத்தூர், எம்.எம்.டி.ஏ., 59வது தெருவில் சென்னை தொடக்கப் பள்ளிக்கு புதியதாக பள்ளிக்கூடம் கட்டடம் கட்டும் பணி, மாதவரம் மண்டலம், வார்டு 33, பாரதியார் தெரு சென்னை மேனிலை பள்ளியில் கூடுதலாக 2வது தளத்தில் 4 வகுப்பறைகள், 2 கழிப்பறைகள் கட்டும் பணி, திரு.வி.நகர் மண்டலம், வார்டு 71ல் மாதவரம் நெடுஞ்சாலையில் புதியதாக சென்னை பெண்கள் மேல்நிலை & சென்னை நடுநிலை பள்ளியில் வகுப்பறை கள் கொண்ட கட்டடம் கட்டும் பணி, கோடம்பாக்கம் மண்டலம், பகுதி 31, வார்டு 132ல் ரங்கராஜபுரத்தில் உள்ள சென்னை தொடக்கப்பள்ளி கட்டடம் (G+3 மாடிகள்) கட் டும் பணி, வளசரவாக்கம் மண்டலம், பகுதி-34, வார்டு-155இல் உள்ள ஈஸ்வரன் கோயில் தெருவில் சென்னை ஆரம்ப பள்ளி கட்டும் பணி, தண்டையார்பேட்டை மண்ட லம், வார்டு 46, பகுதி11ல் உள்ள கல்யாணபு ரம் சென்னை மேல்நிலை பள்ளியில் (G+3) 40 வகுப்பறைகள் படிக்கட்டு மற்றும் கழிப் பறை கட்டும் பணி, தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு44, பெரம்பூர், புதிய காம ராஜர் நகரில் உள்ள சென்னை நடுநிலை பள்ளியில் 20 வகுப்பறைகள் கொண்ட கட் டடம் (G+3) தளங்கள், கழிவறை மற்றும் அங்கான்வாடி1,2 கட்டும் பணிகள், மணலி மண்டலம், காமராஜர் சாலை மற்றும் மாதவரம் மண்டலம், வேலம்மாள் நகர் ஆகிய இடங்களில் 3.06 கோடி செலவில் 2 புகையில்லா எரிமேடைக் கட்டடங்கள்;

அடையாறு மண்டலம், திருவள்ளுவர் நகர், 7வது குறுக்குத் தெருவில் 1.47 கோடி ரூபாய் செலவில் கபடி மைதானம் மற்றும் இறகுப்பந்து மைதானத்துடன் கூடிய உள்வி ளையாட்டு அரங்கம், பெண்கள் உடற்பயிற் சிக் கூடம் மற்றும் கிரிக்கெட் வீசுகளம், மாத வரம் மண்டலம், புத்தகரம், பரப்பன்குளத்தில் 1.40 கோடி ரூபாய் செலவில் புதிய பூங்கா;

**என மொத்தம் 30.60 கோடி ரூபாய் முடி வுற்ற 11 திட்டப்பணிகளை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.**

### பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் அடிக்கல் நாட்டப்பட்ட புதிய திட்டப்பணிகளின் விவரங்கள்

பெருங்குடி மண்டலம், கொட்டிவாக்கம், பக்கிங்ஹாம் கால்வாய் குறுக்கே கிழக்கு கடற்கரை சாலை மற்றும் பழைய மகாபலி புரம் சாலையை இணைக்கும் வகையில் வெங்கடேசபுரம்இளங்கோ நகரில் புதிய பாலம், பக்கிங்ஹாம் கால்வாயின் குறுக்கே கிழக்கு கடற்கரை சாலை மற்றும் பழைய மகாபலிபுரம் சாலையை இணைக்கும் வகையில் காமராஜர் சாலை, வீரமணி சாலை, பாலவாக்கம் பகுதியில் புதிய பாலம், சோழிங்கநல்லூர் மண்டலம், பக்கிங்ஹாம் கால்வாயின் குறுக்கே கிழக்கு கடற்கரை சாலை மற்றும் பழைய மகாபலிபுரம் சாலையை இணைக்கும் வகையில் பாண்டியன் தெரு, அண்ணா நகர், துரைப் பாக்கம் பகுதியில் புதிய பாலம், என 21.03 கோடி மதிப்பீட்டில் 3 புதிய பாலங்கள்; இராயபுரம் மண்டலம், ஆதித்தனார் சாலை, புதுப்பேட்டை டிடிப்போவில் 5.40 கோடி மதிப்பீட்டில் நிர்வாக அலுவலகக் கட்டடம்; திருவொற்றியூர் மண்டலம், பட்டினத்தார் சாலையில் 9.78 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய வணிக வளாகக் கட்டடம்; கோடம் பாக்கம் மண்டலம், ஜாபர்கான்பேட்டை, பிள்ளையார் கோயில் தெரு சென்னை மேல் நிலைப்பள்ளி, தண்டையார்பேட்டை மண் டலம், கண்ணன் தெரு புத்தா தெரு சென்னை நடுநிலைப்பள்ளி, பெருங்குடி மண்டலம், குப்பம் பிரதான சாலை சென்னை தொடக்கப்பள்ளி கட்டடங்கள் கட்டும் பணி 13.89 கோடி மதிப்பீட்டிலும் மாதவரம் மண்டலம், தட்டாங்குளத்தில் 9.50 கோடி மதிப்பீட்டில் மண்டல அலுவல கக் கட்டடம் கட்டும் பணி;

**என மொத்தம் 59.60 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 9 புதிய திட்டப்பணிகளுக்கு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டி னார்.**

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

## ரூ.525 கோடி மதிப்பீட்டில் – செங்கல்பட்டு மாவட்டம்

# முட்டுக்காட்டில் கலைஞர் பன்னாட்டு மாநாடு மையம்!

## முதல்வர் மு.க. ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

**சென்னை, மே 30 -**

**செங்கல்பட்டு மாவட்டம், முட்டுக் காட்டில் ரூ.525 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள கலைஞர் பன்னாட்டு மாநாடு மையத்திற்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.5.2025) தலை மைச் செயலகத்தில், பொதுப்பணித் துறை சார்பில் செங்கல்பட்டு மாவட்டம், முட்டுக்காடு, கிழக்கு கடற்கரை சாலை யில் 37.99 ஏக்கர் நிலப்பரப்பில் 525 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட வுள்ள உலகத்தரம் வாய்ந்த கலைஞர் பன்னாட்டு மாநாடு மையத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

சென்னை, கலைவாணர் அரங்கத் தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர் களின் நூற்றாண்டு விழாவினை யொட்டி 2.6.2023 அன்று நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு இலச்சினையை வெளியிட்டு விழாவில், நவீன தமிழ்நாட்டை உருவாக்கிய சிற்பியான தலைவர் கலைஞர் பெய ரால், சென்னையில் புதிய உலகத் தரம் வாய்ந்த பன்னாட்டு அரங்கம் அமைக் கப்படும் என்று அறிவித்தார்.

அந்த அறிவிப்பிற்கிணங்க, செங் கல்பட்டு மாவட்டம், முட்டுக்காடு, கிழக்கு கடற்கரை சாலையில் 37.99 ஏக்கர் நிலப்பரப்பில் 525 கோடி ரூபாய் மதிப் பீட்டில், 10,000 நபர்கள் அமரக்கூடிய அளவில் 91,024 சதுர அடி பரப்பளவில் பொருட்காட்சி அரங்கம், 5,000 நபர்கள் அமரக்கூடிய அளவில் 50,633 சதுர அடி பரப்பளவில் மாநாட்டு மண்டபம், 1,500 பார்வையாளர்கள் அமரக்கூடிய வகையில் கலையரங்கம் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் 5,12,800 சதுர அடி மொத்த பரப்பளவில் கட்டப்படவுள்ள கலைஞர் பன்னாட்டு மாநாடு மையத் திற்கு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

மேலும், கலைஞர் பன்னாட்டு மாநாட்டு மையம் முழுவதும் குளிரூட் டும் வசதி மற்றும் மின் ஆக்கி வசதி, மின்தூக்கி வசதி, 1638 சீருந்துகள் மற் றும் 1700 இருச்சக்கர வாகனங்கள் நிறுத்தும் வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் கட்டப்படவுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், துணை முதல மைச்சர் உதயநிதி ஸ்டாலின், பொதுப் பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, தலைமைச் செயலாளர் நா.முருகா னந்தம், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, பொதுப்பணித் துறை முதன்மை தலைமை பொறியாளர் எஸ். மணி வண்ணன் மற்றும் அரசு உயர் அலுவ லர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.5.2025) தலைமைச் செயலகத்தில், பொதுப்பணித் துறை சார்பில் செங்கல்பட்டு மாவட்டம், முட்டுக்காடு, கிழக்கு கடற்கரை சாலையில் 37.99 ஏக்கர் நிலப்பரப்பில் 525 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள உலகத்தரம் வாய்ந்த கலைஞர் பன்னாட்டு மாநாடு மையத்திற்கு அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, பொதுப்பணித் துறை முதன்மை தலைமை பொறியாளர் எஸ். மணிவண்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.